මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk


මගේ අංකය / எனது இல. / My No.: NPD/GSP2022
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2021. 12. 15

சுற்றறிக்கை இல.: MF/NPD 02/2021

அனைத்து மாவட்ட செயலாளர்களுக்கு,

## கிராமத்துடன் உரையாடல் 2022

2022 - 2024 ஆம் ஆண்டிற்கான நடுத்தர கால வரவு செலவுத்திட்ட கட்டமைப்பிற்குள் வரவு செலவு திட்டம் - 2022 இற்காக நிதி ஒதுக்கீடு செய்வதில், அபிவிருத்தியின் பலன்கள் விரைவாக மக்களுக்கு சென்றடையும் வகையில் பிராந்திய அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட முன்மொழிவினூடாக முன்வைக்கப்பட்ட "கிராமத்துடன் உரையாடல்" கிராமிய அபிவிருத்தித் திட்டம் 2022 ஆம் ஆண்டிற்கான முதன்மையான கிராமிய் அபிவிருத்தித் திட்டமாகச் செயற்படுத்தப்படும். தற்போதைய கோவிட் 19 தொற்றுநோய் நிலையால் ஏற்படுத்தப்பட்டுள்ள குறுகிய கால சவால்களிற்கு கவனம் செலுத்துவதன் மூலம் கிராமிய மக்கள் சமூகத்தின் சிதைக்கப்பட்டுள்ள வாழ்வாதாரங்களை புத்துயிர் அளித்து கிராமிய உற்பத்திப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதினூடாகத் தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்தல் முதன்மையான தேவையாகும். இவ்வாறே எந்தவொரு பிராந்திய அல்லது சமூக சமத்துவமின்மையும் இன்றி, கிராமிய அபிவிருத்தியின் நன்மைகள் முழு மக்களிற்கும் பகிர்ந்தளிப்படுவதை உறுதி செய்தலானது எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், கடந்த கால இயற்கை அனர்த்தங்களினால் சேதமடைந்துள்ள வீதிகள் உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகளை உடனடியாகச் சீரமைப்பதும் காலத்தின் தேவையாகக் காணப்படுகிறது.

2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் செயற்படுத்தப்படுகின்ற "கிராமத்துடன் உரையாடல்" கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளை செயற்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் என்பவற்றைப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களினூடாக நிகழ்த்துவதற்கு ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதுடன் முழு வேலைத் திட்டத்தையும் முன்னுரிமை வேலைத் திட்டமாக செயற்படுத்தலானது உங்களது மேற்பார்வையின் கீழ் நிகழ வேண்டும்.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தக்கூடிய அபிவிருத்தித் துறைகள், பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்புத் தொடர்பான ஜனாதிபதி செயலணியின் 07.09.2021 திகதியிடப்பட்ட கடிதத்தினூடாக பிரதேச செயலாளர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

"கிராமத்துடன் உரையாடல்" என்ற பிரதேச அபிவிருத்தி வேலைத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்காக இச்சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

## 1. அபிவிருத்திப் பிரிவுகளிற்கு ஏற்ப நிதி ஒதுக்கீடு

1.1 அதன் பிரகாரம், கிராமிய அபிவிருத்திக்காக நிதி ஒதுக்கீடு முறைமையானது பின்வருமாற:

- •கிராம அபிவிருத்திக் கருத்திட்டங்கள்(கிராம அலுவலர் பிரிவுக்கு ரூபா 3 மில்லியன்) - ரூபா 42,063 மில்லியன்
- •உள்ளூராட்சிப் பிரிவுகளின் அபிவிருத்தி (பிரிவுக்கு ரூபா 4 மில்லியன்) - ரூபா 19,668 மில்லியன்
- •கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி (மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலதிகமாக) - ரூபா 19,894 மில்லியன்
- •பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு ரூபா 15 மில்லியன்) - ரூபா 3,375 மில்லியன்

1.2 மேலே 1.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு நிதி ஒதுக்கீடு மட்டத்தின் கீழும் கருத்திட்டங்களைத் தெரிவு செய்வதில், கிராம சேவையாளர் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்ட அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகள் பின்வரும் விடயப்பிரிவுகளில் வரிசைப்படுத்தப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| வாழ்வாதார அபிவிருத்தி | - | 40% |
| பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி | - | 40% |
| சுற்றாடல் மற்றும் நிலையான அபிவிருத்தி | - | 10% |
| சமூக நலன் மற்றும் சமூக அபிவிருத்தி | - | 10% |

1.3 அனைத்து விடயங்களையும் கருத்திற்கொண்டால், வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களுக்கு குறைந்தபட்சம் 40% ஒதுக்கப்பட வேண்டியதுடன், மேலும் அதிகபட்ச எல்லையை பொருட்படுத்தாமல் தேசிய மற்றும் பிரதேச தேவைகள் மற்றும் உற்பத்தித்திறன் அடிப்படையில் வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்ளலாம்.

## 2 அபிவிருத்தி கருத்திட்ட முன்மொழிவுகளை இனங்காணல்

2.1 வாழ்வாதார அபிவிருத்தி

2.1.1 வாழ்வாதார அபிவிருத்திக்காக ஒதுக்கப்படும் கருத்திட்டங்களின் மூலம் பல குடும்பங்களுக்கு பலன்கள் பகிர்ந்தளிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக ஒரு குடும்ப

அலகுக்கு பல நன்மைகள் கிடைக்காத வகையில் வேலைத் திட்டம் செயற்படுத்தப்படல் வேண்டும்.

2.1.2 கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் வாழ்வாதார அபிவிருத்திக்காக அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களால் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட திட்டங்களில் கவனம் செலுத்தி தேவையான நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். அவ்வாறான கருத்திட்டங்களிற்குப் போதியளவு நிதி ஒதுக்கீடுகள் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து பூர்த்தி செய்யப்படாதவிடத்து, மேலே 1.1 இன் கீழ் மற்ற பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைப் பெறுவதற்கு அவர்களுடன் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும்.

2.1.3 வாழ்வாதார அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளை இயந்திரங்கள் / உபகரணங்களை விநியோகிப்பதில் மாத்திரம் மட்டுப்படுத்தப்படாமல், ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு பொருத்தமானதாக விரிவாக ஆய்வு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட பிரதேச மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு எதிர்காலத்தில் திறனான பங்களிப்பை வழங்கும் நிலையான வாழ்வாதார கருத்திட்ட முன்மொழிவுகளிற்கு மாத்திரம் ஒதுக்கீடுகளை மேற்கொள்வதைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும்.

2.1.4 கிராம உத்தியோகத்தர் பிரிவினுள் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை ஒருங்கிணைத்து தகவற் தொகுதியை பராமரித்தலானது கிராம சேவையாளர் பிரிவின் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2.1.5 வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட ஒரு பயனாளி குடும்பத்திற்குப் பொறுப்பான தொழில்நுட்ப விடயங்களுடன் தொடர்புடைய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களினால் அதிகாரியொருவர் நிச்சயமாக நியமிக்கப்படல் வேண்டும்.

2.1.6 வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மிகவும் வெற்றிகரமான முறையில் செயற்படுத்துவதற்கான மேலதிக வழிமுறைகள் இணைப்பு 1 இனூடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

2.2 பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2.2.1 நிர்மாணம் மற்றும் புனரமைப்புக் கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதற்கு முன்னர், அந்நிர்மாணம் எதிர் காலத்தில் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காக எவ்வித தடையுமின்றி பயன்படுத்த முடியும் எனவும், பராமரிப்பு நடவடிக்கைகளிற்கு குறித்த வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும், மற்றும் நிலைத்தகு முறையில் பராமரிக்கப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் உள்ளன எனவும் பிரதேச செயலாளரினால் உறுதியளிக்கப்படல் வேண்டும்.

2.2.2 வெள்ளம், மண்சரிவு மற்றும் வறட்சி உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டதன் காரணமாக உட்கட்டமைப்பு மறுசீரமைப்பு தொடர்பான கருத்திட்டங்கள்.

2.2.3 கிராம உத்தியோகத்தர் பிரிவினுள் பொது உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களையும் மேற்பார்வையிடலானது கிராம சேவையாளர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி அலுவலரின் பொறுப்பாகும்.

2.2.4 பொது உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தித் திட்டங்களை மிகவும் வெற்றிகரமாக செயற்படுத்துவதை நோக்காகக் கொண்ட குறித்த மேலதிக வழிமுறைகள் "இணைப்பு 2" இல் கொடுக்கப்பட்டுள்ளன.

2.3 சுற்றாடல் மற்றும் நிலைத்தகு அபிவிருத்தி

2.3.1 சுற்றாடல் மற்றும் நிலைத்தகு அபிவிருத்தியின் கீழ் கருத்திட்டங்களை செயற்படுத்தும் பொழுது அதிக உணர்திறன் வாய்ந்த சுற்றாடல் வலயங்கள் மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படும் விதத்தில் அனைத்து துறைகளாலும் உறுதி செய்யப்படல் வேண்டும்.

2.3.2 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுற்றாடல் மற்றும் நிலைத்தகு அபிவிருத்தித் வேலைத்திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களையும் மேற்பார்வையிடலானது கிராம சேவையாளர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2.4 சமூக நலன் மற்றும் சமூக அபிவிருத்தி

2.4.1 சமூக நலன் மற்றும் சமூக அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதற்கு முன்னர் அந்நிர்மாணம் எதிர்காலத்தில் உத்தேசிக்கப்பட்ட நோக்கத்திற்காக எவ்வித தடையுமின்றி பயன்படுத்த முடியும் எனவும், பராமரிப்பு நடவடிக்கைகளிற்கு குறித்த வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும், மற்றும் நிலைத்தகு முறையில் பராமரிக்கப்படுவதற்கான வேலைத் திட்டங்கள் உள்ளன எனவும் பிரதேச செயலாளரினால் உறுதியளிக்கப்படல் வேண்டும்.

2.4.2 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சுற்றாடல் மற்றும் நிலைத்தகு அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் அனைத்து அபிவிருத்தித் திட்டங்களையும் மேற்பார் வையிடுவது கிராம சேவையாளர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2.5 “கிராமங்களுடனான உரையாடல்” கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ், கிராமக் குழு மட்டத்திலும் பிரதேச செயலக பிரிவு மட்டத்திலும் பொருத்தமான கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு வழங்கப்படும் ஆலோசனைகளின் அடிப்படையில் அந்தந்த மட்டங்களிலான அளவுகோல்கள் உருவாக்கப்படல் வேண்டும்.

2.6 அனைத்து பிரிவுகளின் கீழும் செயற்படுத்த இயலுமான கருத்திட்டமொன்றின் அதிகபட்ச மதிப்பு ரூ. 5 மில்லியன் ஆகும். ஒரு சிறந்த சந்தர்ப்பத்தில் தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட பெறுமதி ரூ. 5 மில்லியனுக்கும் அதிகமாக காணப்படுமிடத்து மாவட்டச் செயலாளரின் விஷேட அனுமதியானது பிரதேச செயலாளரால் பெற்றுக்கொள்ளப் படல் வேண்டும்.

2.7 2022 ஆம் ஆண்டில் "கிராமத்துடன் உரையாடல்" நிகழ்ச்சித் திட்டத்தினூடாக செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள், அமைச்சு மற்றும் திணைக்கள மட்டத்தில் குறித்த நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள் இரட்டிப்பாவதை தடுக்குமுகமாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதுடன் கருத்திட்டங்களின் சாத்தியக்கூறுகள் மற்றும் பிராந்திய மற்றும் தேசிய தேவைகளைக் கருத்திற் கொண்டு, அவ்வனைத்து கருத்திட்டங்களையும் செயற்படுத்த முடியும்

2.8 கிராம அலுவலர் பிரிவுகள் சிலவற்றில் மக்களிற்கு அதிக நன்மைகள் கிடைக்கும் சாத்தியங்களைக் கொண்ட அத்தியவசியமான நிர்மாணக் கருத்திட்டமொன்று (சிறிய பாலங்கள், அணைக்கட்டுகள், வர்த்தக மையங்கள் போன்றவை) நடைமுறைப்படுத்தலின் பொழுது குறித்த கிராமிய குழுக்களின் ஒப்புதலுடன் அதிகபட்ச 4 கிராம அலுவலர் பிரிவுகளின் நிதி ஒதுக்கத்தை சேர்த்து தனி ஒரு கருத்திட்டமாக செயற்படுத்த முடியும். இதற்காக, மேலே உள்ள 2.6 இன் வழிமுறையைப் பின்பற்றல் வேண்டும்.

2.9 இணங்காணப்பட்ட அனைத்து அபிவிருத்தித் திட்டங்களின் சாத்தியக்கூறுகள் இணைப்பு 3 இன் பிரகாரம் ஆய்வு செய்யப்படுவதுடன், தேவைக்கேற்ப குறித்த அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதேச மட்ட அதிகாரிகளின் பரிந்துரையையும் பெறப்படல் வேண்டும்.

## 3 கருத்திட்டங்களின் ஒப்புதலளித்தல் மற்றும் செயற்படுத்தல்

3.1 மேற்கூறிய அனைத்தையும் கருத்தில் கொண்டு, 2022ஆம் ஆண்டில் "கிராமத்துடன் உரையாடல்" வேலைத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட முடியுமான கருத்திட்ட முன்மொழிவுகள், பிரதேச செயலாளரினால் 2022.01.31க்கு முன்னர் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் பரிந்துரையைப் பெற்று மாவட்ட செயலாளரிடம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். மாவட்டச் செயலாளரினால் உரிய கருத்திட்டங்களுக்கு அனுமதி வழங்கியதன் பின்னர், நடைமுறைப்படுத்துவதற்கு பிரதேச செயலாளரிடம் தேவையான நிதி ஒதுக்கீடுகள் விடுவிக்கப்படல் வேண்டும்.

3.2 ஒப்புதல் பெற்றுக்கொண்ட மாவட்டத்தில் மொத்தக் கருத்திட்ட முன்மொழிவுகள் அத்தகைய கருத்திட்டங்களை செயல்படுத்துவதற்கான கால எல்லை மற்றும் (2022 ஆம் ஆண்டில் அனைத்து கருத்திட்டங்களுக்கும் காலாண்டு அடிப்படையில் ஒதுக்கீடுகள் செய்யப்படுவதால்) கருத்திட்டங்களுக்கு பணம் செலுத்த வேண்டிய நேரம் சரியாக தீர்மானிக்கப்பட்டு

காலாண்டிற்கு அமைவாக நிதித் தேவைகள் 2022.02.10 இற்கு முன்பதாக மாவட்டச் செயலாளர்களினால் இணைப்பு 4 இற்கு அமைவாக தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

3.3 அனைத்து கருத்திட்ட முன்மொழிவுகளும் வருடத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டு முடிக்கப்பட்டு பணம் செலுத்தப்படுவதை மாவட்ட செயலாளர்கள் மற்றும் குறித்த பிரதேச செயலாளர்கள் உறுதி செய்தல் வேண்டும்.

3.4 இந்தத் வேலைத்திட்டத்தினூடாக உள்ளடக்கப்பட்ட விடயத்திற்கு அமைவான கருத்திட்டத்திற்குரிய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வெளியிடப்பட்டுள்ள தொழில்நுட்ப அறிவுறுத்தல்கள் மற்றும் அளவுகோல்களின்படி கருத்திட்டங்கள் செயற்படுத்தப்படல் வேண்டும்.

**4 வேலைத்திட்டங்களை மேற்பார்வையிடல்**

4.1 இம்முழு வேலைத்திட்டமும் தேசிய ரீதியில் நிதி அமைச்சினூடாக, மாவட்ட ரீதியில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு மற்றும் பிரதேச மட்டத்தில் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றினூடாக மேற்பார்வையிடப்படும்.

4.2 இம்மொத்த வேலைத்திட்டமானது மாவட்ட மட்டத்தில் செயற்படுத்தும் பொழுது மாவட்ட செயலாளரிற்கு மேற்பார்வை மற்றும் கண்காணிப்பதற்கு இயலுமான விதத்தில், குறித்த அமைச்சு மற்றும் திணைக்களங்களுடன் ஒருங்கிணைப்பதற்கு பொருத்தமான வழிமுறைகள் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளரின் வழிகாட்டுதலின் கீழ் உருவாக்கப்பட வேண்டியதுடன், மாதந்த பௌதிக மற்றும் நிதி முன்னேற்ற அறிக்கைகள் நிதி அமைச்சிற்கு அனுப்பப்படல் வேண்டும்

4.3 கிராம சேவை அலுவலர் பிரிவுக்கான மொத்த ஒதுக்கீட்டின் மூலம் நடைமுறைப்படுத்தப்படும் மேலே 1.1 இன் கீழ் அனைத்து கருத்திட்டங்களின் மேற்பார்வை மற்றும் தரவுகளை பராமரித்தல் என்பன கிராம சேவை அலுவலர் பிரிவின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தரின் பொறுப்பாகும், மேலும் அவற்றின் முன்னேற்றம் துணை/உதவித் திட்டமிடல் பணிப்பாளரூடாக பிரதேச செயலாளருக்கு அறிக்கைப் படுத்தல் வேண்டும்.

**5 நிர்வாக செலவுகள்**

5.1 இவ்வேலைத்திட்டத்தினூடாக செயற்படுத்தப்படுகின்ற நிர்மாண மற்றும் நிர்மாணம் அல்லாத அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மொத்த கருத்திட்ட மதிப்பில் 3% நிர்வாக செலவினங்களுக்காக ஒதுக்கப்படலாம். அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான

மதிப்பீடுகளைத் தயாரிக்கும் போது, அதற்கான நிர்வாகச் செலவுகளும் சேர்க்கப்படல் வேண்டும்.

இவ்வாறு ஒதுக்கப்படும் நிர்வாகச் செலவு பின்வருமாறு ஒதுக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| மாவட்ட செயலகத்திற்கு | - | 1% |
| பிரதேச செயலகத்திற்கு | - | 2% |

5.2 பிரதேச செயலகத்தினால் நேரடியாக கருத் திட்டத்தை அமுல்படுத்தாமல் வேறு தொடர் புடைய அரச நிறுவனங்களால் (உதாரணமாக உள்ளூராட்சி நிறுவனங்கள், கமநல அபிவிருத்தி திணைக்களம்) கருத்திட்டத்தை செயற்படுத்தும் பொழுது பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கப்பட்ட 2% நிர்வாகச் செலவு பின்வருமாறு வகுக்கப்படல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| பிரதேச செயலகத்திற்கு | - | 1% |
| கருத்திட்டத்தை செயற்படுத்தும் நிறுவனத்திற்கு | - | 1% |

5.3 ஒதுக்கப்படுகின்ற நிர்வாகச் செலவுகளினூடாக, இம்முழு வேலைத் திட்டம் தொடர்பாக மாவட்ட மற்றும் பிரதேச ரீதியில் ஒழுங்கு செய்யப்படுகின்ற கூட்டங்கள், கலந்துரையாடல்கள், விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள், களப்பயணங்கள் ஆகியவற்றிற்காகச் மேற்கொள்ளப்படுகின்ற செலவுகளை ஈடுசெய்ய வேண்டும்.

5.4 அபிவிருத்தி கருத்திட்டத்தினை செயற்படுத்துகின்ற செயற்பாடு மற்றும் மேற்பார்வை நடவடிக்கையை வலுப்படுத்துவதற்காக, அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான கடமைகளை மேற்கொள்கின்ற மாவட்ட ரீதியிலான உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச ரீதியிலான உத்தியோகத்தர்களின், பயணச் செலவுகள், கூட்டுப் படிகள், மேலதிக நேரம் மற்றும் விடுமுறை ஊதியங்கள் போன்றவற்றை செலுத்துவதற்கு மேலே வேறாக்கப்பட்டுள்ள நிர்வாகச் செலவுகள் பயன்படுத்தப்படல் வேண்டும்.

## 6 கணக்காய்வு மற்றும் பிற விடயங்கள்

6.1 அனைத்து கருத்திட்டங்களும் பெறுகை வழிகாட்டி, நிதிப் பிரமாணம் மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரதான அமைச்சால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின்படி செயற்படுத்தப்படல் வேண்டும்.

6.2 இவ்வேலைத்திட்டத்தின் கீழ் கருத்திட்டத்தை செயற்படுத்துவதற்கான ஒழுங்கு முறையின் வெளிப்படைத்தன்மை, செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களின் தரத்தை உறுதி

செய்வதற்காக மொத்த வேலைத் திட்டத்தின் சிறந்த முறையில் முடிவுற்ற முறையின் கணக்காய்வுக்குட்படும் வகையிலான வழிமுறைகள் குறித்த செலவுகள் ஏற்கும் நிறுவன மட்டத்தில் உருவாக்கப்படல் வேண்டும்.

6.3 இவ்வேலைத்திட்டம் தொடர்பான மக்கள் கருத்தானது எழுத்து, சமூக ஊடக வலையமைப்புக்கள், மின்னஞ்சல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி நிதியமைச்சிற்கு அனுப்புவதற்கான வழிமுறை மாவட்டச் செயலாளரினால் உருவாக்கப் படல் வேண்டும்.

6.4 இவ்வேலைத் திட்டத்தினூடாக செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்குச் செலுத்த வேண்டிய அனைத்து வரிகள் மற்றும் பிற கொடுப்பனவுகள்இவ்வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளுடன் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதுடன் மேலதிக ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெறாது.

6.5 இக்கருத்திட்டங்கள் மற்றும் மாகாண சபை வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் பிரதி செய்யப்படுவதை தடுப்பதற்கு, ஒப்புதலளிக்கப்பட்ட அனைத்துக் கருத்திட்டங்களின் விவரங்களும் மாகாண பிரதானச் செயலாளர்களுக்கு அனுப்பப்படல் வேண்டும்.

6.6 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் பிராந்திய அபிவிருத்தி திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகள் மற்றுமொரு சுற்றறிக்கை மூலம் வெளியிடப்படும்.

இச்சுற்றறிக்கையின் உள்ளடக்கங்கள் குறித்து மாவட்ட மற்றும் பிராந்திய ஒருங்கிணைப்புக்குழு உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம் / எஸ்.ஆர் ஆட்டிகல

திறைசேரியின் செயலாளர்

பிரதிகள் -

1. மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள்
2. பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்களின் தலைவர்கள்
3. அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்
4. அனைத்து மாகாண பிரதான செயலாளர்கள்
5. கணக்காய்வாளர் நாயகம் - கணக்காய்வு அலுவலகம்
6. பணிப்பாளர் நாயகம் - தேசிய திட்டமிடல் திணைக்களம்
7. பணிப்பாளர் நாயகம் - தேசிய வரவு செலவு திட்ட திணைக்களம்

8. பணிப்பாளர் நாயகம் - அபிவிருத்தி நிதி திணைக்களம்
9. பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
10. பணிப்பாளர் நாயகம் - கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் மேற்பார்வைத் திணைக்களம்
11. அனைத்து மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்கள்
12. அனைத்து மாவட்ட தலைமை கணக்காளர்கள்
13. அனைத்து மாவட்ட விவசாயப் பணிப்பாளர்கள்

**இணைப்பு 1**

## வரவு செலவுத் திட்டம் 2022 - "கிராமத்துடன் உரையாடல் " கிராமிய அபிவிருத்தித் திட்டம்

**தேசிய வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்**

தற்போதைய கோவிட் 19 தொற்றால் எழுந்துள்ள குறுகிய கால சவால்களை கருத்திற்கொண்டு கிராமப்புற சமுதாயத்தின் பாதிக்கப்பட்ட வாழ்வாதாரங்களை மீட்டெடுப்பதினூடாக கிராமப்புற உற்பத்திப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக தேசிய பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்படுகிறது. இவ்வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துவதில், எந்தவொரு பிராந்திய, அரசியல் அல்லது சமூக வேறுபாடுகளின்றி அனைத்து மக்களும் பயனடைவதை உறுதி செய்வதில் அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது.

வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் மாகாண சபை வேலைத்திட்டங்களுக்கு இடையில் சரியான ஒருங்கிணைப்பின்மை பொது நிதி துஷ்பிரயோகத்திற்கு முக்கிய காரணமாகும். கருத்திட்ட நகல், உரிய நேரத்தில் உள்வாங்காமை, வருட இறுதியில் கருத்திட்டங்கள் கைவிடப்பட்டமை, தேவையான பயனாளிகளுக்கு அரசாங்க உதவிகள் கிடைக்காமை மற்றும் முறையாக பின்பற்றப்படாதமை போன்ற காரணங்களால் எதிர்பார்த்த வாழ்வாதார அபிவிருத்தி இலக்குகள் எட்டப்படவில்லை என்பது அவதானிக்கப்படுகிறது.

அதன் பிரகாரம், 2022 வரவு செலவுத் திட்டத்தினூடாக வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக மத்திய அரசின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கான நிதி ஒதுக்கீட்டிற்கு மேலதிகமாக ரூ. 85,000 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில், "கிராமங்களுடனான உரையாடல்" பிராந்திய அபிவிருத்தித் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் 40% ஒதுக்கப்படும். இவ்வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மத்திய அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் மாகாண சபைகளுக்கு இடையில் முறையான ஒருங்கிணைப்பு முன்னெடுக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான அறிவுறுத்தல்கள் பின்வருமாறு.

### 1. கருத்திட்டங்களை இணங்கண்டு மதிப்பீடு செய்தல் மற்றும் ஒப்புதல் அளித்தல்

**கருத்திட்டங்களை இணங்காணல்**

1.1 2022 வரவு செலவுத் திட்டத்தினூடாக வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் கீழ் வேலைத்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் தயாரிக்கும் போது தேசிய தேவைகள் மற்றும் இலக்குகள், உள்ளீடு வரம்புகள் (தாவர அளவுகள், விலங்குகள், இயந்திரங்கள், மூலப்பொருட்கள், உரங்கள்,

கால்நடை உணவுகள்), சுற்றாடல், உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை என்பன தொடர்பாக கருத்திற்கொள்ளல் வேண்டும்.

1.2 நாட்டின் முக்கியத் தேவையான இறக்குமதி செய்யப்பட்ட மாற்றுப் பொருட்களுக்கான (காய்ந்த மிளகாய், பெரிய வெங்காயம், உருளைக்கிழங்கு, சோளம், திரவப் பால்) விதை மற்றும் தாவர உற்பத்தி மற்றும் விளைச்சல் ஊக்குவிப்புத் திட்டங்களை உருவாக்குவதற்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

1.3 பெருந்தோட்டப் பயிர்கள், ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் மற்றும் நாற்று மேடைகளின் அபிவிருத்தியுடன், பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி செயற்றிறன் மற்றும் ஊக்குவிப்புக்காகவும் கருத்திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.4 பிராந்திய வள சாத்தியக்கூறுகள் மற்றும் தனி நபர் திறன் தொடர்பாகவும் கருத்திற் கொண்டு சிற்சில பிரதேசங்களில் சிறந்த நம்பகத் தன்மையுடன் உற்பத்திக் கிராமங்களாக ஒவ்வொரு பயிர் அல்லது வேறு திறன் அலகுக்கும் புதிய அல்லது விருத்தி செய்யக்கூடிய கிராமங்களை தெரிவு செய்வதை கருத்திற் கொள்ளல் வேண்டும்.

1.5 ஏற்றுமதிக்கு அதிக கேள்விகள் காணப்படுகின்ற வாசனை திரவியங்கள், அலங்கார மலர்கள் மற்றும் தாவரங்கள், அலங்கார மீன்கள், இரத்தினங்கள் மற்றும் நகைகள், கைவினைப்பொருட்கள் போன்ற துறைகளை விருத்தி செய்வதற்கு கருத்திட்டங்கள் தயாரிக்கப்படல் வேண்டும்.

1.6 நச்சுத்தன்மையற்ற உணவு உற்பத்தியை வலுப்படுத்த பசுமை விவசாயத்திற்கான ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநிலைகளுக்கு ஏற்ப உயர்தர சேதன உர உற்பத்தி கருத்திட்டங்களை ஊக்குவிக்க முடியும்.

1.7 பாரம்பரியமாக மேற்கொள்ளப்படுகின்ற உற்பத்திப் பொருட்களுக்கான பெறுமதி சேர்ப்பதன் மூலம் உற்பத்தியாளரின் வருமான அதிகரிப்பதனூடாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளின் விரிவடையும் துறைகளுக்கு விஷேட கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

1.8 வாழ்வாதார அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் இயந்திரங்கள் / உபகரணங்கள் மற்றும் பயிற்சித் திட்டங்களுக்கு மாத்திரம் ஒதுக்கப்படாமல் விரிவான முறையில் ஆராய்ந்து தயாரிக்கப்பட்ட பிரதேச மற்றும் தேசிய பொருளாதாரத்திற்கு எதிர்காலத்தில் வினைத்திறனான பங்களிப்பை வழங்கக் கூடிய நிலையான வாழ்வாதார கருத்திட்ட முன்மொழிவுகளுக்காக ஒதுக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

1.9 நிலையான வாழ்வாதாரக் கருத்திட்டங்களை இனங்காண்பது தொடர்பான விழிப்புணர்வுச் செயற்திட்டங்கள் பலவற்றை பல்வேறு நிலைகளில் நிகழ்த்துவதற்கான நடவடிக்கைகள் நிதியமைச்சினால் எடுக்கப்பட்டுள்ளன.

**மதிப்பீடு மற்றும் ஒப்புதலளித்தல்**

1.10 பொருளாதார புத்தெழுச்சி, வறுமை ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதி செயலணியின் பூரணமான முன்னறிவிப்பின் அடிப்படையில் உங்கள் முன்வைக்கப்பட்டுள்ள “கிராமங்களுடனான உரையாடல்” திட்டத்தின் கீழ் இதுவரை இனங்காணப்பட்டுள்ள கருத்திட்ட முன்மொழிவுகளை குறித்த பிரதேச செயலாளர்களினால் துரித மீளாய்விற்குட்படுத்தப்படல் வேண்டும்.

1.11 2022 வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள மற்றும் இது வரையில் வெளிநாட்டு கடன் அல்லது நன்கொடைகளால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்களால் பூரணப்படுத்தப்படுகின்ற துறைகள் (வேலைத்திட்டங்கள், பிரதேச பயனாளிகளின் தகவல்கள்) தொடர்பான பிரதேச செயலகங்கள் ரீதியான தகவல்கள் 2021.12.31 இற்கு முன்பதாக குறித்த அமைச்சுக்களினூடாக உமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அத்தகவல்கள் பிரதேச செயலாளர்களுக்கு விரைவாக அனுப்பப்படல் வேண்டும்.

1.12 2022 ஆம் ஆண்டில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் வேலைத்திட்டங்களுக்குத் தேவையான வளங்களை கருத்திற்கொண்டு வள இருப்பு மற்றும் பிரதேச மட்டத்தில் இணங்காணப்பட்ட கருத்திட்டங்களில் பூர்த்தி செய்வதற்கு இயலுமான தேவைகள் (தாவர அளவுகள், விலங்குகள், இயந்திரங்கள், மூலப்பொருட்கள், உரங்கள், விலங்குணவுகள்) 2021.12.31 இற்கு முன்பதாக குறித்த அமைச்சுக்களினூடாக உமக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அத்தகவல்கள் பிரதேச செயலாளர்களுக்கு விரைவாக அனுப்பப்படல் வேண்டும்.

1.13 ஒரு வாழ்வாதாரக் கருத்திட்டத்திற்கு "கிராமத்துடன் உரையாடல்" வேலைத்திட்டத்தின் வெவ்வேறு நிலைகளின் கீழ் ஒதுக்கீடுகள் காணப்படுகின்ற நிலையில் சாத்தியக்கூறு, பிரதேச மற்றும் தேசிய நலனைக் கருத்தில் கொண்டு அக்கருத்திட்டத்தைச் செயற்படுத்தப்படலாம்

1.14 ஒப்புதலைப் பெற்றுக்கொண்ட அவ்வவ் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் விடயப்பரப்பிற்கு உட்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் அதற்குத் தேவையான உள்ளீடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கைகள் 2022.02.10 க்கு முன்பதாக குறித்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிற்கு அனுப்பப்படல் வேண்டும்.

## 2. பயனாளிகளைத் தெரிவு செய்தல்

2.1 தனிநபர்கள் அல்லது சங்கங்களுக்கு நன்கொடைகள் வழங்கும் பொழுது, ஒவ்வொரு பயனாளிக்கும் ஆண்டுதோறும் வழங்கப்படும் அதிகபட்ச நன்கொடைத் தொகையானது, கருத்திட்டங்களிற்கு அமைவாக குறித்த தொழில்நுட்ப அமைச்சினூடாக அல்லது திணைக்களத்தால் தீர்மானிக்கப்படல் வேண்டும்.

2.2 நன்மையடைவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளி, குறித்த துறையில் உண்மையாக ஈடுபடுகின்ற அல்லது அதற்கான விருப்பம் மற்றும் ஆர்வம் கொண்ட ஒரு சாத்தியமான தொழில்முனைவோராக இருத்தல் வேண்டும். அவ்வாறு இணங்காணப்பட்ட ஒரு

சாத்தியமான தொழில்முனைவோருக்கு நன்மைகளை வழங்குவதற்கு குடும்ப வருமானம் அல்லது பிற காரணங்கள் தடையாக அமையக்கூடாது.

2.3 ஒரு வருடத்திற்குள் மத்திய அரசாங்கம் அல்லது மாகாண சபைகளால் ஒரு கருத்திட்டத்திற்கு போதியளவு, வருமானத்தை நேரடியாக பாதிக்கும் நன்மைகள் அல்லது ஒத்த உபகரணங்கள், மூலப்பொருட்கள் போன்றன வழங்கப்படாத பயனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படல் வேண்டும்.

2.4 விண்ணப்பதாரிகளின் மத்தியில் எச்சந்தர்ப்பத்திலும் இளைஞர்கள், பெண்கள் மற்றும் விசேட திறன்களைக் (Differentially abled) கொண்டவர்களுக்கு முடிந்தவரை சிறப்பு கவனம் செலுத்தலாம்.

2.5 ஒரு பயனாளியின் மீது பல மூலங்களில் இருந்து பயன்கள் கிடைக்கும் சந்தர்ப்பங்களைத் தவிர்ப்பதற்காக, இவ்வேலைத் திட்டத்தின் கீழ் இணங்காணப்படுகின்ற அனைத்து கருத்திட்ட முன்மொழிவுகளும் இணைப்பு 5 (பத்திரம் 1) இல் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தின் மூலம் ஒருங்கிணைப்பு அலுவலரால் பெறப்பட்டு பிரதேச செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2.6 அனைத்து மூலங்கள் தொடர்பான கருத்திட்ட முன்மொழிவுகள், ஒவ்வொரு களம் மற்றும் கருத்திட்டப் பகுதிக்கு அமைவாக வகைப்படுத்தப்பட்ட தகவல்கள் அடங்கிய தரவுத் தளமானது பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும் (படிவம் 1 இல் உள்ள தகவலின் அடிப்படையில் MS Excel Sheetஐப் பயன்படுத்தி).

2.7 வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு நன்மைகளைப் பெறுவதற்கு முன்னர், பயனாளியினால் பொருத்தமான ஆரம்ப நடவடிக்கைகளை (பொருத்தமான காணியைத் தெரிவு செய்தல், நிலத்தைத் தயாரித்தல் போன்ற) மேற்கொள்வதற்கு உடன்பட வேண்டும்.

2.8 சிறப்பு தொழில்நுட்ப மற்றும் அதிக செலவு சூழ்நிலைகள் தவிர்த்து வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு திட்டங்களுக்கு குறைந்தபட்சம் 25% பயனாளிகளின் பங்களிப்பை (தொழிலாளர் உட்பட) ஊக்குவித்தல்.

2.9 இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும், உற்பத்தியாளர்களிற்கு பிரதேச மைய தனி வேலைத்திட்டங்களுக்குப் பதிலாக உற்பத்தி சார்ந்த வலயங்களாக ஊக்குவிப்பதற்காக குழுக்கள் / சங்கங்களிற்கு நிவாரணம் வழங்குவது பொருத்தமானதாகும்.

2.10 இறக்குமதி மாற்றுப் பயிர் மற்றும் ஏற்றுமதி சந்தையை இலக்காகக் கொண்டு விஷேட தொழில்நுட்ப அறிவு மற்றும் தொழிலாளர் செலவை தாங்கக்கூடிய கருத்திட்டங்கள் (பசுமை இல்லம், விதை பாதுகாப்பு வசதிகள் போன்ற திட்டங்கள்) என்பவற்றிற்கு பொருத்தமான பிரதேசங்களில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளவர்கள் மாத்திரமன்றி புதிய தொழில் முனைவோர்களிற்கும் 100% நிதி மற்றும் தொழில்நுட்ப நன்மைகளை அரசாங்கத்தால் வழங்க முடியும்.

2.11 ஒரே நிலத்தில் பல பயிர்களைப் பயிரிடும்போது, மண்ணின் தன்மை, காலநிலை மற்றும் தேசிய உற்பத்தி இலக்குகளுக்கு ஏற்ப மிகவும் பொருத்தமான பயிருக்கு மட்டுமே நன்மைகள் வழங்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், பெருந்தோட்டப்

பயிர்ச்செய்கையில் நிலத்திலிருந்து உற்பத்தியை அதிகரிக்க ஒரு கலப்புப் பயிர்ச்செய்கை கருத்திட்டம் கூட செயற்படுத்தப்படலாம்.

2.12 வீட்டுத்தோட்டம் வேலைத்திட்டத்தில் உள்ள அனைத்து உள்ளீடுகளையும் ஒரே நேரத்தில் வழங்காமல் வேலைத்திட்டத்தின் முன்னேற்றத்திற்கு அமைவாக முதலீட்டு உதவி கட்டம் கட்டமாக வழங்கப்படுவதுடன் குறித்த தொழில்நுட்ப அலுவலர்களின் வழிகாட்டுதலின் கீழ் கருத்திட்டத்தின் திட்டமானது குடும்ப அலகு அலுவலரால் தயாரிக்கப்படல் வேண்டும்.

## 3. வாழ்வாதார வேலைத் திட்டங்களைச் செயற்படுத்துதல்

3.1 வாழ்வாதார கருத்திட்டங்களைச் செயற்படுத்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் ஒருங்கிணைப்பதற்கும், வெவ்வேறு விடயங்களிற்கான அனைத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக ஒரு சிரேஷ்ட அதிகாரியை நியமித்து, 31 டிசம்பர் 2021 க்கு முன்னர் நிதி அமைச்சிற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் அத்தகவல் உங்களிற்கும் அனுப்பி வைக்கப்படும்.

3.2 வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் மற்றும் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை பயனாளிகளுக்கு வழங்குவதற்கான வேலைத்திட்டம் குறித்த அமைச்சு மற்றும் திணைக்கள அதிகாரிகளின் பங்களிப்புடன் தயாரிக்கப்படல் வேண்டும்.

3.3 அத்தகைய தொழில்நுட்ப அறிவை பயனாளிகளுக்கு வழங்குவதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், மாவட்டச் செயலாளர்களின் முழு மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், மாவட்டத்திலுள்ள குறித்த தொழில்நுட்ப அறிவைக் கொண்ட அலுவலர்களின் பங்கேற்புடன், பயன்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் அல்லது தேவையான சந்தர்ப்பங்களில் நிகழ்ச்சியின் போது நடைபெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3.4 வாழ்வாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்காக அரசிற்கு உரித்தான தற்போது திறனான முறையில் பாவனைக்குட்படுத்தப்படாத கட்டடங்கள், உரிய பொருத்தமான வழிமுறையொன்றை பின்பற்றுவதுடன் குறித்த தொழில்முனைவோர் சங்கங்களிடம் மாத்திரமே ஒப்படைக்க முடியும்.

## 4. மையப்படுத்தப்பட்ட தகவற் தொகுதி

4.1 வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் தொழில் முனைவோர் விருத்தியை நோக்காகக் கொண்டு பயிற்சி, உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்களை வழங்கும் பயனாளிகள் பற்றிய விரிவான தகவல் இணைப்பு 5ஐ உள்ளடக்கிய மையப்படுத்தப்பட்ட தரவுத்தளம் நிதி அமைச்சினால் தயாரிக்கப்பட்டு பராமரிக்கப்படும். இதற்காக உங்களுக்கு தேவையான தகவல்கள் எதிர்காலத்தில் வழங்கப்படும்.

4.2 இத்தரவுத்தொகுதியுடன் தொடர்பான பயனாளிகளின் தகவல்கள் (பின் இணைப்பு 5) அவ்வப் பயனாளிகளின் குடும்ப அலகிற்கு அல்லது சங்கத்திற்கு பொறுப்பான கள

அதிகாரியால் உள்ளிடப்பட்டு, பிரதேச செயலகத்தின் துணை / உதவி திட்டமிடல் பணிப்பாளரால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.

4.3 எதிர்வரும் ஆண்டிற்குரிய வாழ்வாதார நலன்களை வழங்குவதற்காக இத்தகவற்தொகுதியின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

4.4 மேலும், இதுவரையில் உங்களது மாவட்டத்திற்காக தயாரிக்கப்படுகின்ற "மாவட்ட போசணை மற்றும் உணவுத் திட்டம்" 2022 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டம் மற்றும் இலக்குகளிற்காக வாழ்வாதாரத் திட்டங்களின் கீழ் பெறப்படுகின்ற ஒதுக்கங்களிலிருந்து விவசாயம், தோட்டங்கள், மீன்பிடி மற்றும் கால்நடைகள் போன்ற வாழ்வாதாரக் கருத்திட்டங்களிலிருந்து கிராமிய மட்டத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற உற்பத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

**இணைப்பு 2**

## வரவு செலவுத் திட்டம் 2022 - “கிராமத்துடன் உரையாடல் ” கிராமிய அபிவிருத்தித் திட்டம்

### பொது உட் கட்டமைப்பு அபிவிருத்தி

1. வீதி அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் இணங்காணப்பட்டுள்ள வீதிகள், விவசாயப் பாதைகள், பாலங்கள், மதகுகள் மற்றும் பக்கச்சுவர்கள் என்பன ஒப்புதலுக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், குறித்த பிரதான அமைச்சு மற்றும் திணைக்கள நிகழ்ச்சிகளினூடாக ஏற்கனவே அபிவிருத்தி நடவடிக்கைகளிற்காக தெரிவு செய்யப்படவில்லை என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும்.
2. அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கும் ஒரு வீட்டுக் கடை (Home shop) அமைப்பதற்கு 2022 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தினூடாக விசேட ஒதுக்கீடுகளைத் தவிர்த்து, விசேட தேவைகளின் அடிப்படையில் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடுகள் மேற்கொள்ள முடியும்.
3. அனைத்து கருத்திட்டங்களும் அரச நிறுவனங்களின் முழு மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
4. கிராமப்புற வீடுகளின் கீழ் பயனாளிகள் வீடுகளைத் தெரிவு செய்யும் பொழுது, குறைந்த வருமானம் மற்றும் வறுமையில் வாடும் குடும்பங்களைத் தெரிவு செய்யப்படுவதுடன், அக் கருத்திட்டத்திற்காக பயனாளிகளில் குறைந்தபட்சம் 25% இற்கு (தொழிலாளர் உட்பட) பங்களிப்பு வழங்கப்படல் வேண்டும்.
5. கிராமிய வீட்டுப் பயனாளிகளின் தகுதி, கிராம உத்தியோகத்தர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் வீடு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோரின் கூட்டுக் கள ஆய்வுகளை மேற்கொண்டு, தகுதிக்கான எழுத்துப்பூர்வ உறுதிப்படுத்தல் பெறப்படல் வேண்டும்.
6. பகுதியளவு பூர்த்தி செய்யப்பட வீடுகளை நிறைவுபடுத்தும் கருத்திட்டம், மலசலகூட உபகரணங்களை வழங்குவதற்குமான கருத்திட்டங்களை செயற்படுத்துவதில் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அளவுகோல்கள் மற்றும் விதிமுறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.
7. பகுதியளவில் நிர்மாணிக்கப்பட்ட சேவைப் பகுதி அலகுகளை நிறைவு செய்தல் மற்றும் வசதிகளை ஏற்படுத்தி தர முடியும் .
8. குப்பை சேகரிப்பு நிலையங்களை நிறுவும் பொழுது சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் சமூக மனப்பான்மைகளை கவனத்தில் எடுத்தல் வேண்டும்.

## முன்மொழியப்பட்ட நிர்மாணக் கருத்திட்டத்தின் ஆரம்ப சாத்தியக்கூற்று ஆய்வறிக்கை - 2022

1. பிரதேச செயலகப் பிரிவு :
2. கிராம அலுவலர் பிரிவின் பெயர் மற்றும் எண் :
3. முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தின் பெயர் :
4. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை (ரூ).:
5. கருத் திட்டத்தின் தன்மை (√) இடுக:

| | |
|---|---|
| I. முற்றிலும் புதிய நிர்மாணமாகும் | |
| II. புதிய நிர்மாணம் (ஒரு பகுதியாக / ஒரு கட்டமாக) | |
| III. ஏற்கனவே உள்ள திட்டத்தின் ஒரு பகுதி | |
| IV. ஏற்கனவே உள்ள கருத்திட்டத்தின் மறுசீரமைப்பு / புதுப்பித்தல் ஆகும் | |

6. மேலே உள்ள துணை எண் 5 இன் கீழ் அடையாளம் காணப்பட்ட கருத்திட்டம் பற்றிய பின்வரும் தகவல்களை வழங்கவும்.

6.1. கருத் திட்டத்திற்காக முன்மொழியப்பட்ட காணி அரசுக்கு சொந்தமானதா? ஆம்/இல்லை

இல்லை எனின் அரசிடம் ஒப்படைக்க உத்தேசித்துள்ள காணி தெளிவானதா? ஆம்/இல்லை

காணி தெளிவானது எனின், எழுத்து மூலம் தொடர்புடைய காணியின் உரிமை தொடர்பில் சம்மதம் வழங்கப்பட்டுள்ளது / சம்மதத்திற்கான விருப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது ஆம்/இல்லை

6.2. குறித்த நிர்மாண நடிவடிக்கைகளை மேற்கொள்வதற்கு விசேடமாக பின்வரும் நிறுவனங்களில் ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவற்றின் ஒப்புதலைப் பெற வேண்டுமானால், அதனைக் குறிப்பிடவும்

| துணை எண். | நிறுவனம் | சம்மதம் பெறப்பட வேண்டுமா அல்லது இல்லையா என்பது | குறித்த நிறுவனத்திடம் இருந்து ஒப்புதல் கிடைக்கப் பெறுமா? |
|---|---|---|---|
| 1 | மத்திய சுற்றாடல் அதிகார சபை | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 2 | புவியியல் மற்றும் சுரங்கப் பணியகம் | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 3 | வனப் பாதுகாப்புத் திணைக்களம் | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 4 | வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 5 | உள்ளூராட்சி நிறுவனம் (குறிப்பிடவும்) | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 6 | நீர்ப்பாசன திணைக்களம் | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 7 | மின்சார சபை | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 8 | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |
| 9 | வேறு (குறிப்பிடவும்) | ஆம்/இல்லை | ஆம்/இல்லை |

7. முன்னைய ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளின் விவரங்கள்

7.1. கடந்த 03 வருடங்களில் இந்த கருத்திட்டத்தின் முன்மொழியப்பட்ட பணிகளுக்காக ஏதாவது நிறுவனமும் பணத்தை முதலீடு செய்திருக்கிறதா? ஆம்/இல்லை

ஆம் எனில், கீழே உள்ள படிவத்தை பூர்த்தி செய்யவும்

| ஆண்டு | பணம் (ரூ) | முதலீடு செய்த நிறுவனம் | விஷேட காரணிகள் (இருப்பின்) |
|---|---|---|---|
| 2021 | | | |
| 2020 | | | |
| 2019 | | | |

7.2. அவ்வாறெனின், கருத் திட்ட வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளதா? ஆம்/இல்லை

8. **2022 நிதி முதலீட்டு விபரங்கள்**

8.1 இந்த கருத்திட்டத்திற்காக இவ்வருடம் வேறொரு நிதி மூலத்திலிருந்து நிதி ஒதுக்கப்பட்டோ அல்லது ஒதுக்கீட்டிற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா?

ஆம்/இல்லை

8.2. மேலே உள்ள 8.1 இன் கீழ் ஆம் எனில் பின்வரும் தகவல்களை வழங்கவும்

| நிதி மூலம் | அமைச்சு/நிறுவனம் | பூரணப்படுத்தப்பட்டுள்ள வேலைத் தொகுதி | தொகை (ரூ .) | இதனூடாக கருத்திட்டத்தை பூரணப்படுத்த முடியுமா? |
|---|---|---|---|---|
| 1. | | | | ஆம்/இல்லை |
| 2. | | | | ஆம்/இல்லை |

8.3. முன்மொழியப்பட்ட கருத் திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட நிதி ஒதுக்கீடு போதுமானது/ போதுமானதாக இல்லை.

8.4. இந்த முதலீடுகளினூடான கருத்திட்டம்

i. பூரணப்படுத்தப்பட்டுள்ளது /பகுதியளவு பூரணப்படுத்தப்பட்டுள்ளது /மேலும் இக் கருத்திட்டத்தை பூரணப்படுத்துவதற்கு ரூ. ................ நிதி (அண்ணளவாக) ஈடுபடுத்தல் வேண்டும்.

8.5. அபிவிருத்தி செய்வதற்கு முன்மொழியப்பட்ட இக் கருத்திட்டம் தற்போது சிறந்த நிலையில் உள்ளதா? ஆம்/இல்லை

அதன் பிரகாரம், முன்மொழியப்பட்ட நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படக் கூடாது/மேற்கொள்ளப்பட வேண்டும்.

9. முன்மொழியப்பட்ட கருத்திட்டத்தில் இருந்து எதிர்பார்க்கப்படும் வெளியீடு / பயனாளிகளின் எண்ணிக்கை பற்றிய விபரங்கள்

i. **வீதிக் கருத்திட்டங்களின் பெயர்கள்** புதிய அபிவிருத்திகளை மேற்கொள்ளும் / புதிதாக நிர்மாணிக்கப்படும் தூரம் (மீட்டர் / கிலோ மீட்டர்).........................

ii. **விவசாயம்/நீர்ப்பாசனக்** கருத்திட்டமாக இருப்பின் தூரம் (மீ/கி.மீ) ............ புதிதாக பயிரிடப்படும் பரப்பு (ஏக்கர்) ................

iii. வேறு..........................................................................................................................

iv. பயனாளிகளின் எண்ணிக்கை - குடும்பங்கள்: ............தனிநபர்கள் - (பெண்கள்):.............. (ஆண்கள்): ...................

10. கருத்திட்டத்தினூடாக கிராமிய சமூகத்திற்கு வழங்கப்படுகின்ற முக்கிய பயன்களைக் குறிப்பிடுக.

i.

ii.

iii.

11. பிரதேச கிராமிய சமூகத்தின் தேவைக்கேற்ப இக் கருத்திட்டம் அத்தியாவசியமானது / அவசியமான து / முன்னுரிமை அளிக்கப்படாதது / அவசியமற்றது

12. 2022 வருடத்திற்குள் இக் கருத்திட்டத்தை பூரணப்படுத்த முடியுமா? முடியும் / முடியாது

13. ஆம் எனில், அதற்கு செலவாகும் காலம்?: - ............. இருந்து.................. வரை மாதம் / கிழமை................................

14. கருத்திட்டத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள்

14.1. பூர்த்தியடைந்ததும் பராமரிப்பை கையேற்கும் நிறுவனம்.............................................................................

14.2 பூர்த்தியானதன் பின்னர் பராமரிப்புக்கான வேலைத்திட்டம் ஒன்று உண்டா? விபரங்களை வழங்கவும் -

.....................................................................................................................................................

..........................................................................................................

15. இக் கருத்திட்டம் தொடர்பாக கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது / மேற்கொள்ளப்படவில்லை.
மேற்கூறிய தகவல்கள் உண்மை என உறுதியளிக்கிறேன்.

...................................... திகதி:-

அபிவிருத்தி உத்தியோகத்தர்
கிராம அலுவலர் பிரிவு (பெயர் மற்றும் எண்)

மேற்கண்ட தகவல்களைக் கருத்திற் கொண்டு, மேலே கருத்திட்டத்தை 2022 ஆம் ஆண்டில் செயற்படுத்துவது பொருத்தமானது / பொருத்தமற்றது என பரிந்துரைக்கிறேன்

.................................... திகதி:-

பிரதி / உதவி பணிப்பாளர் (திட்டமிடல்)

மேற்கண்ட தகவல்களைக் கருத்திற் கொண்டு, மேலே கருத்திட்டத்தை 2022 ஆம் ஆண்டில் செயற்படுத்துவது பொருத்தமானது / பொருத்தமற்றது என பரிந்துரைக்கிறேன்.

......................... திகதி:-

பிரதேச செயலாளர்
(முத்திரை)

இணைப்பு 4

# "கிராமத்துடன் உரையாடல் 2022" கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டம்

மாவட்டம் :...........................................

| பிரதான நடவடிக்கைகள் | அனுமதிக்கப்பட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த மதிப்பிடப்பட்ட செலவு (ரூ. மில்லியன்) | நிதி இலக்குகள் 2022 (ரூ. மில்லியன்) | | | | 2022 இற்குரிய பௌதீக இலக்குகள் % | | | | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | Q1 | Q2 | Q3 | Q4 | Q1 | Q2 | Q3 | Q4 | |
| கிராமிய அபிவிருத்தி வேலைத் திட்டம் | | | | | | | | | | | |
| உள்ளூராட்சி பிரிவுகளின் அபிவிருத்தி | | | | | | | | | | | |
| கிராமிய வாழ்வாதார அபிவிருத்தி | | | | | | | | | | | |
| மொத்தம் | | | | | | | | | | | |

உறுதிப்படுத்தல் (Verified by)

சான்றுபடுத்தல் (Certified by)

தயாரித்தது :.................

திகதி -

.................................. மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர்

.................................. பிரதான கணக்காளர்

(மாவட்டச் செயலகம்)

முத்திரை முத்திரை

............................................... மாவட்டச் செயலாளர்

முத்திரை

**வரவு செலவுத் திட்டம் 2022 - கிராமத்துடன் உரையாடல் கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டம்**
**தேசிய வாழ்வாதார அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்**
**பயனாளிகளின் தகவல் பத்திரம்**

| 1. மாவட்டம் | 2. பிரதேச செய. பிரிவு | 3. கிராம உத்தியோகத்தர் பிரிவு மற்றும் எண் | |
|---|---|---|---|
| | | | |

<u>தனி நபர் கருத்திட்டம்</u>

| 4. பயனாளியின் பெயர் | 5. தே. அ. அ. இல. | 6. தொலைபேசி இல. | 7. தொழில் /வாழ்வாதாரம் |
|---|---|---|---|
| | | | |

8. முகவரி:..........................................................................................................................................................

குடும்ப உறுப்பினர்களின்:

| பெயர் | தே. அ. அ. இல. | தொலைபேசி இல. | தொழில் /வாழ்வாதாரம் |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |

9. குடும்ப அலகொன்றின் மாதாந்த வருமானம்: ..................................................

10. முன்மொழியப்பட்ட கருத்திட்டம் :..............................................................................................

11. உத்தேச மதிப்பு (அரசாங்க பங்களிப்பு) * ரூ. : .........................................................

| பிரிவு | 11.1 | பயனாளியின் பங்களிப்பு (தொழிலாளர் உட்பட) ரூ. | அரசாங்க பங்களிப்பு | | மொத்தக் கருத்திட்டப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | | | * ரூ | உள்ளீடுகள் (11.2) | |
| மீன் பிடி | | | | | |
| விவசாயம் | | | | | |
| கால்நடைகள் | | | | | |
| பெருந்தோட்டம் | | | | | |
| தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி | | | | | |
| சுற்றுலா | | | | | |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்தி | | | | | |
| உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் சேவைகள் | | | | | |
| வீட்டுக் கைத்தொழில் | | | | | |

<u>குழுக் கருத்திட்டங்கள்</u>

12. சங்கத்தின் பெயர் :..........................................................................................................................................

13. பதிவு எண் / வருடம்:..................................................................

14. உறுப்பினர்களின் எண்ணிக்கை:.....................................

15. முன்மொழியப்பட்ட கருத் திட்டம்:........................................................................................................

16. உத்தேச மதிப்பு (அரசாங்க பங்களிப்பு) * ரூ. : ...................................

| பிரிவு | 16.1 | பயனாளியின் பங்களிப்பு (தொழிலாளர் உட்பட) ரூ | அரசாங்க பங்களிப்பு | | மொத்தக் கருத்திட்டப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|
| | | | * ரூ | உள்ளீடுகள் (16.2) | |
| மீன் பிடி | | | | | |
| விவசாயம் | | | | | |
| கால்நடைகள் | | | | | |
| பெருந்தோட்டம் | | | | | |
| தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி | | | | | |
| சுற்றுலா | | | | | |
| சந்தைப்படுத்தல் அபிவிருத்தி | | | | | |
| உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் சேவைகள் | | | | | |
| வீட்டுக் கைத்தொழில் | | | | | |

எனது / எமது * சங்கத்தின் வாழ்வாதாரத் தொழிலின் அபிவிருத்திக்காக ஒரு வருட காலப்பகுதிக்குள் அரசாங்க நன்கொடைகளைப் பெற்றுள்ளது / பெறவில்லை* எனவும், இந்தக் கருத்திட்டத்தின் மொத்தப் பெறுமதியில் ..........% பயனாளி பங்களிப்பை ஏற்றுக்கொள்வதற்கும், மற்றும் கருத் திட்டத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும், பெறப்படுகின்ற நன்கொடைகளை சரியான முறையில் பயன்படுத்தப்படும் எனவும் நான் உத்தரவாதம் அளிக்கிறேன்.

..................................................................................................

திகதி: பயனாளி/ சங்கத்தின் தலைவர் / செயலாளர் * இன் கையொப்பம்

**சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்,**

இந்த விண்ணப்பதாரர் / சங்கம் இந்தப் பலனிற்கு * தகுதியுடையவர் / தகுதியற்றவர் * எனவும் வாழ்வாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செயற்படுத்துவதற்காக கடந்த வருடங்களில் அரசாங்க நன்கொடைகள் பெறப்பட்டுள்ளது / பெறப்படவில்லை* என்று நான் உறுதியளிக்கிறேன்.

| 17 பெயர் - | 18 தொலைபேசி இல. | கையொப்பம் |
|---|---|---|
| | | |

**வாழ்வாதார அபிவிருத்தி தொழில்நுட்ப அலுவலர் (பிராந்திய நிலை),**

19. நிறுவனம்.............................................................

20. பதவி...............................................................

இந்த விண்ணப்பதாரர் / சங்கம் * இந்த பலனிற்கு தகுதியானவர் / தகுதியற்றவர்* என நான் பரிந்துரைக்கிறேன்.

| 21 பெயர் - | 22 தொலைபேசி இல. | கையொப்பம் |
|---|---|---|
| | | |

மேற்கண்ட தகவல்களைக் கருத்தில் கொண்டு, குறித்த வாழ்வாதார அபிவிருத்திக் கருத் திட்டம் 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது / பொருத்தமற்றது * என்று பரிந்துரைக்கிறேன்.

.................................. திகதி:-

**பிரதி / உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்)** (முத்திரை)

மேற்கண்ட தகவல்களைக் கருத்தில் கொண்டு, குறித்த வாழ்வாதார அபிவிருத்திக் கருத் திட்டம் 2022 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவது பொருத்தமானது / பொருத்தமற்றது * என்று பரிந்துரைக்கிறேன்.

.......................... திகதி:-

**பிரதேச செயலாளர்**

(முத்திரை)

*தேவையற்ற சொற்களை நீக்குக.